**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 07.10.2025

**அசல் வழக்கு எண்.240/2011**

**வா.சா.1 – கலைவாணி, க/பெ.ராஜா**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

எட்டாவது பிரதிவாதி கலைச்செல்வி உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய தங்கை ஆவார். வழக்கு சொத்து என்ன சொத்து என்றால் நிலம் ஆகும். மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் 6 ஏக்கர் ஆகும். சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் கதிர்பூர் கிராமத்தில் உள்ளது. சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அண்ணாமலை முதலியாருக்கு பாத்தியப்பட்டது. அண்ணாமலை முதலியார் யார் என்றால் என்னுடைய தாத்தா ஆவார். அண்ணாமலை முதலியார் இறந்த பிறகு சொத்து யாருக்கு வந்தது என்றால் அவரது மனைவி குப்பம்மாள் அவரது மகன் சண்முகம் முதலியார், வஜ்ஜிரவேல் முதலியார் மற்றும் செல்வராஜ் முதலியார் ஆகியோருக்கு வந்தது. செல்வராஜ் முதலியார் மற்றவர்களுக்கு அக்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார் என்றால் சரிதான். நீங்களும் எட்டாவது பிரதிவாதி கலைச்செல்வியும் சண்முகம் முதலியார் அவர்களின் மகள்கள் என்றால் சரிதான். குப்பம்மாள் சண்முகம் முதலியார் வஜ்ஜிரவேல் முதலியார் ஆகியோர் அவர்களுக்கிடையே கடந்த 1987 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணம் வழக்கில் முதல் ஆவணமாக உங்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். சண்முகம் முதலியாருக்கு அ பட்டியில் சொத்து ஒதுக்கப்பட்டது அதேபோல் வஜ்ரவேல் முதலியார் ஆ பட்டியல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் இ பட்டியல் சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. ஈ பட்டியல் சொத்து பாட்டி குப்பம்மாளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். இ பட்டியல் சொத்து கிணறு, மின் மோட்டார், பம்பு செட்டு மின் இணைப்பு மற்றும் களத்து மேடு ஆகிய 12 சென்ட் இருவரும் பொதுவாக வைத்து ஒதுக்கீடு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

பாகப்பிரிவினை பத்திரம் அதன்படி எழுதப்பட்டது என்றால் சரிதான். சண்முக முதலியாருக்கு மேற்கு பக்கம் 2 ஏக்கர் 88 சென்ட் ஒதுக்கினார்கள் என்றால் சரிதான். அதேபோல் கிழக்கு பக்கம் வஜ்ரவேல் முதலியாருக்கு 2 ஏக்கர் 88 சென்ட் ஒதுக்கினார்கள் என்றால் சரிதான். சண்முக முதலியார் இருந்தவரை மேற்படி சொத்தில் அவருடைய பாகத்தில் பயிர் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். அதேபோல் வஜ்ரவேல் முதலியாரும் அவருடைய பாகத்தில் பயிர்த்தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை செய்த போது நீங்கள் அப்பாவுடன் இருந்தீர்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை நடந்த பிறகு 1988 ஆம் ஆண்டு உங்களுக்கு திருமணம் நடைபெற்றது பிறகு நீங்கள் கணவர் வீட்டுக்கு சென்றுவிட்டீர்கள் என்றால் சரிதான். உங்கள் அப்பா இப்பொழுது காலமானார் என்றால் திருமணம் ஆகி 3 ஆண்டுகளுக்குப் பிறகு காலமாகிவிட்டார். உங்கள் தங்கை கலைச்செல்விக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் 1998 திருமணம் நடைபெற்றது. உங்கள் உடன் பிறந்தவர்கள் வேறு யாராவது உண்டா என்றால் கணேசன் என்று எனக்கு ஒரு தம்பி உண்டு இறந்துவிட்டார். அவர் எப்பொழுது இறந்து விட்டார் என்றால் கடந்த 2010ம் ஆண்டு இறந்துவிட்டார். அவர் இருக்கும் வரை திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். உங்கள் அப்பா சண்முகம் இறந்த பிறகு உங்களுடைய தம்பி கணேசன் என்பவர்தான் சொத்தினை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். உங்கள் அப்பா இறந்த பிறகு அவருடைய சொத்தினை உங்கள் பெயருக்கு பட்டா மாத்தினீர்களா என்றால் தெரியாது. சண்முக முதலியார் மற்றும் வஜ்ஜிரவேல் முதலியார் பாகம் பிரித்துக் கொண்ட பிறகு அவர்களுடைய பெயரில் பட்டா மாற்றிக் கொண்டார்களா என்றால் தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் பாகப்பிரிவினை சொத்து தவிர வேறு சொத்துக்கள் எதுவும் கிடையாது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்கள் அப்பா பாகத்தை நீங்களும் உங்கள் தங்கை எட்டாம் பிரதிவாதி கலைச்செல்வியும் அனுபவித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். மேற்படி மொத்த சொத்து 6 ஏக்கரில் அரசாங்கம் 5 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்துவிட்டது என்றால் சரிதான். எந்த ஆண்டு எடுத்துக் கொண்டார்கள் என்றால் தெரியாது. அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்துவிட்டது என்பதனை எப்படி தெரிந்து கொண்டீர்கள் என்றால் என் அப்பாவே சொன்னார் எனக்கும் தெரியும். என் அப்பா இருக்கும் போது நில ஆர்ஜிதம் செய்துவிட்டார்கள். நில ஆர்ஜிதம் செய்த தகவல் உங்களுக்கு தெரியுமா அரசாங்கத்திலிருந்து அறிவிப்பு ஏதேனும் கொடுத்தார்களா

என்றால் எனக்கு தெரியாது என் அப்பாவுக்கு தான் தெரியும். அதற்காக இழப்பீடு ஏதேனும் கொடுத்தார்களா என்றால் தெரியாது. என் அப்பாவுக்கு தான் தெரியும். நீங்களோ அல்லது உங்கள் சகோதரியோ அரசாங்கத்திடமிருந்து இழப்பீடு எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.